**செ.வெ.எண்: 39** **நாள்: 22.01.2018**

## பத்திரிக்கை செய்தி

**அம்மா இரு சக்கர வாகனம் பெற விண்ணப்பிக்கலாம்.**
**புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல் கட்டமாக 2334 பெண்களுக்கு வினியோகம்**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.ஆதி.3) துறை அரசு ஆணை (நிலை) எண்: 19-ன் படி மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மா அவர்கள் 2016 ஆண்டு அளித்த தேர்தல் வாக்குறுதியான 2017 - 18 ஆம் ஆண்டுக்கான "அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம்" மகளிர் பணிபுரியும் இடங்கள் மற்றும் பிற இடங்களுக்கு செல்ல இரு சக்கர வாகனங்கள் (Moped / Scooter 50% மானிய விலையில்) வாங்கிட நகரப்புறம் மற்றும் ஊரக பகுதிகளில் வசிக்கும் கீழ்காணும் தகுதியுடைய மகளிரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. கல்வி தகுதி 8 ஆம் வகுப்பு
2. 18 முதல் 40 வயது வரை
3. ஆண்டு வருமானம் 2.50 இலட்சத்திற்குள்.
4. ஒரு குடும்பத்தில் ஒரு பெண்

**முன்னுரிமை:**

1. ஆதரவற்ற விதவை/மகளிரை குடும்பத் தலைவராக கொண்ட/கணவரால் கைவிடப்பட்ட/ மாற்றுத்திறனாளிகள்/திருமணம் ஆகாத 35 வயதுக்கு மேற்பட்ட முதிர் கன்னிகள்/ தாழ்த்தப்பட்டவர்/ பழங்குடியினர் / திருநங்கைகள்.

2. அமைப்பு சார்ந்த/அமைப்பு சாராத/ தனியார் நிறுவனங்கள்/அரசு திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனம்/சமுதாயம் சார்ந்த அமைப்புகள் (PLF, VPRC & Makamai) சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர், சமுதாய சுகாதார பணியாளர் மற்றும் சுய தொழில் புரிவோர். ஒத்த தொழில் குழுவில் பணிபுரிந்து வாழ்வாதார செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுவோர்.

**சான்றிதழ்கள்:**

1. வயது சான்றிதழ்
2. புகைப்படம் (Pass Port size Photo)
3. இருப்பிடச் சான்று (வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், ஆதார் அட்டை, மின் கட்டண ரசீது)
4. இரு சக்கரவாகன ஓட்டுனர் உரிமம்
5. வருமான சான்று (தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்தால் துறை தலைவர் / சுய சான்று)

6. வேலை பார்ப்பதற்கான பணி சான்று
7. தொடர்புடைய நிறுவன துறை தலைவரால் வழங்கப்பட்ட ஊதிய சான்று.
8. தினக் கூலி அடிப்படையில் பணிபுரிபவராக இருந்தால் Society-யில் இருந்து சான்று.
9. ஆதார் கார்டு
10. 8 ஆம் வகுப்புக்கான கல்வி சான்று.
11. மாற்று சான்றிதழ் (T.C)
12. முன்னுரிமை பெற தகுதியுள்ளவர்கள் அதற்கான சான்றிதழ்களை இணைக்க வேண்டும்.
13. சாதி சான்று (SC & ST only)
14. மாற்றுத்திறனாளியெனில் தேசிய அடையாள அட்டை.

**விலைப்புள்ளி:**

01.01.2018 பிறகு தயார் செய்யப்பட்ட இரு சக்கர வாகனத்திற்கான 125cc-க்கு உட்பட்ட திறன் கொண்ட வாகனம் மட்டுமே தகுதி.

இத்திட்டத்தில் 50% மானியம் அரசும், மீதமுள்ள தொகையை பயனாளிகளும் செலுத்திக் கொள்ள வேண்டியது.

## விண்ணப்பம் பெறும் இடம்

பேரூராட்சிப் பகுதியெனில் பேரூராட்சி செயல் அலுவலரிடமும்/ நகராட்சி எனில் சம்மந்தப்பட்ட நகராட்சி ஆணையரிடமும் ஊரகப் பகுதி எனில் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களிடமும் பெற்று கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் 22.01.2018 முதல் 05.02.2018 வரை மாலை 5.00 மணிக்குள் தொடர்புடைய அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும் அதற்கு மேல் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பித்த நபர்களுக்கு அரசு விதி முறைகள் மற்றும் கள ஆய்வு அடிப்படையில் பயனாளிகள் இறுதி செய்யப்படுவார்கள்.

எனவே புதுக்கோட்டை மாவட்ட நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளிலுள்ள தகுதியான பெண்கள் முன்னோடி திட்டமான அம்மா இரு சக்கர வாகன திட்டத்தின்கீழ் பயன்பெற்று தங்கள் பயணத்தை எளிதாக்கி பணியினை/தொழிலினை மேலும் சிறப்புடன் செய்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**